நட்டு, விவசாயிகள் 4 ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், அதிலே தென்னங்காய்கள் காய்க்காத நிலைமையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட போலியான தென்னை மரக் கன்றுகளை உற்பத்தி செய்யக்கூடியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பண்ணைகளிலே உற்பத்தி செய்து வழங்கப்படுகின்ற தென்னங்கன்றுகளைப் பற்றித்தான் இங்கே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. தனியார் வழங்கக்கூடிய, உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய தென்னங்கன்றுகள், அப்படி ஏதாவது உற்பத்தி பாதிக்கக்கூடிய கன்றுகளைத் தயாரித்துத் தருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால், அது எந்தப் பண்ணையிலிருந்து வழங்கப்பட்டது என்ற புகாரை அவர் எழுதிக்கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

192—

தூர் வாருதல்

*9277—**திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் பரதராமி, தட்டப்பாறை, கல்லப்பாடி மற்றும் கூடநகரம் ஏரிகளைத் தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

2008 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

முற்பகல் 9–40

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி ஏற்கெனவே வறட்சியின் பிடியில் இருக்கின்ற தொகுதி. குடிநீரே அத்துப்போன தொகுதி. இன்னும் சொல்லப்போனால், ஆயிரம் அடி Bore போட்டால்கூட சொம்பு அளவு, டம்ளர் அளவுக்குக்கூட தண்ணீரே இல்லாத பகுதி, வேலூர் மாவட்டத்தில் கருப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதி. இந்தப் பகுதிகளைக் கணக்கில்கொண்டு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு ஏரிகளைத் தூர் வாரும் திட்டத்தின் அடிப்படையிலே எனக்கு ஏற்கெனவே அந்தப் பகுதியிலே கூட நகரம் ஏரியைத் தூர் வாருவதற்காக 10 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே எங்கள் தொகுதி மக்களின் சார்பில் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அந்தப் பகுதிக்கு அருகில் இருக்கின்ற தட்டப்பாறை ஏரி—மோர்தானா அணைத் தண்ணீர் அந்த ஏரியின் மையப் பகுதியில் கால்வாய் வெட்டப்பட்டு ஏரிக்குள்தான் வருகிறது. அந்த ஏரியைத் தூர் வாரவேண்டுமென்று கேட்கிறோம். அந்த ஏரிப் பகுதியில் ஏரியைக் கடந்து தண்ணீர் போவதால், மோர்தானாவில் இருந்து தண்ணீர் அந்த ஏரிக்கு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். அந்தப் பகுதியில் தண்ணீர் போகின்றபடியால் மக்கள் சட்டத்தை மீறி அந்த ஏரியின் கால்வாயை உடைத்து ஏரிக்குத் தண்ணீரை எடுக்கின்றார்கள். எனவே, அந்த ஏரியைத் தூர் வார வேண்டும். அந்தக் கால்வாயை உடைத்ததால் பிரச்சினைக்குரிய அந்த விவசாயிகள்மீது போடப்பட்ட வழக்குகளையும் வாபஸ் வாங்கி அந்த ஏரிக்குத் தண்ணீர் அளிக்க வேண்டும்.

அதேமாதிரி, பரதராமி பகுதியில் இருக்கின்ற ஏரி மிகப் பெரிய ஏரி. பரதராமி பகுதியில் இருக்கின்ற காட்டுப் பகுதியில் வருகின்ற தண்ணீர் ஆந்திரப் பகுதிக்குச் சென்றுவிடுகிறது. அந்தத் தண்ணீரை இந்தப் பகுதிக்கு செக்–டேம் கட்டி கொண்டுவந்தால் (மணியடிக்கப்பெற்றது) தலைவர் அவர்களே, இது நான்கு ஏரிகள் சம்பந்தப்பட்ட கேள்வி. இந்தக் கேள்விக்கு உட்பட்டுதான் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

[2008 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திருமதி ஜி. லதா: நான்கு ஏரிகள் இருக்கின்றன. அந்த 4 ஏரிகளில்— பரதராமி ஏரியில் செக்–டேம் கட்டி தண்ணீரைத் தடுத்தால் ஆந்திரப் பகுதிக்குப் போகாமல் பரதராமி ஏரிக்குத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த ஏரியைத் தூர் வார வேண்டும். அதேமாதிரி கல்லப்பாடி பகுதியில் இருக்கின்ற ஏரியைத் தூர் வாரினால் இராமாலை, மூங்கப்பட்டு, கல்லப்பாடி போன்ற 4 ஊராட்சிகளில் உள்ள பல விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரமாக ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்? மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைப் போடும்போது இருந்த நிலைமை வேறு, இப்போது இருக்கின்ற நிலைமை வேறு. அவரே சொன்னார் கூடநகரம் ஏரி தூர் வாரப்பட்டிருக்கிறது என்று. தட்டப்பாறை ஏரிக்கு மோர்தானா அணை தண்ணீர் வரவேண்டுமென்று கேட்டார். சென்ற முறையே அந்தப் பிரச்சினை வந்தது. ஆகையினால் இந்த முறை கால்வாய்ப் பணிக்கு 3–1/2 கோடி ரூபாய் செலவிடுகிறபோது தட்டப்பாறை ஏரிக்குத் தனியாக ஒரு மதகு வைத்து தண்ணீர் போகவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். பரதராமி ஏரியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 10 இலட்சம் ரூபாய் செலவிலே தூர் வாரப்பட்டிருக்கிறது. ஆகவே, இவை நடந்து முடிந்துவிட்ட வேலைகள். நடப்பதற்கு முன்னாலேயே போடப்பட்ட கேள்வி என்பதால் அவர் கேட்டிருக்கிறார். ஆனால், தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகளை திருமதி லதா அவர்கள் பேசுவதற்கு இந்தக் கேள்வி துணையாக இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. Supplementary question short ஆக இருக்கவேண்டும்.

திருமதி ஜி. லதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடநகரம் ஏரியைப் பொறுத்தவரையிலே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தூர் வாரப்பட்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த கூடநகரம் ஏரிக்கு ஆற்றிலிருந்து போகக்கூடிய கால்வாயில் ஆற்று மணல் எடுக்கப்பட்டு 20 அடி பள்ளத்தில் இருப்பதால் அந்த ஏரிக்குத் தண்ணீர் போவதற்கு வாய்ப்புகளே இல்லை. 4 கிலோ மீட்டர்

தூரத்திற்கு அந்தக் கால்வாயும் தூர் வாரப்படவேண்டும். ஏரிகளும் தூர் வாரப்பட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு ஏரிகள் பணிப் பரிந்துரை என்று கொடுத்த நம்முடைய முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கூடுதலாக இன்னும் பல ஏரிகளைத் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளைத் தூர் வாருவதற்கான திட்டம் குறித்து இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, நபார்டு வங்கி, உலக வங்கித் திட்டத்தின்மூலமாக இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய நிதிகள் பெறப்பட்டு, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா? ஒரு சில கேள்விகள் வரும்போது இங்கே இடையிடையே நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக பல இடங்களிலே அதற்கான முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. நான் 1996 ஆம் ஆண்டு முதல் கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற மிகப் பெரிய ஏரியான திருமக்கோட்டை திரிமேனி ஏரியைத் தூர் வாருவதற்கான திட்ட மதிப்பீடுகள் 3 முறை வந்து இன்னும் அது அனுமதிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 1–1/4 கோடி ரூபாய் அளவிலே அது சீரமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு இப்போதுகூட கருத்துருக்கள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டாவது நிதி ஒதுக்கீடு செய்து அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே திருமக்கோட்டை திருமேனி ஏரி தூர் வாரப்படுமா என்பதுதான் கேள்வியினுடைய மையக் கருத்து.

அதற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களிலே வந்துவிடும், போதுமா?

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

பேருந்து வசதி

***20410—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து இரயில் நிலையம், கருமலைக்கூடல், கோம்பரான்காடு, புதுரெட்டியூர், சின்னக்காவூர் வழியாகத் தாளையூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து இரயில் நிலையம், கருமலைக்கூடல், கோம்பரான்காடு, புதுரெட்டியூர், சின்னக்காவூர் வழியாகத் தாளையூருக்கு சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தடம் எண் 25 மற்றும் தடம் எண் 35 ஆகியவற்றின்மூலமாக காலை, பிற்பகல் மற்றும் மாலையில் பள்ளி நேரத்தில் 6 நடைகள் இயக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.*

திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பேருந்து நிலையத்திலிருந்து மேட்டூர் இரயில் நிலையம் சுமார் 10 கி.மீ. இடைவெளியிலே இருக்கிறது. மேட்டூர் பேருந்து*